செ.கு-033 நாள்-05-02-14

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**

**அறிக்கை – 5.2.2014**

கிருஷ்ணகிரி மாவட்டம், **கெலவரபள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து** வலது மற்றும் இடதுபுற பிரதானக் கால்வாய் வாயிலாக இரண்டாம் போக புன்செய் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **6.2.2014** முதல் கெலவரபள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுற பிரதானக் கால்வாய் வாயிலாக இரண்டாம் போக புன்செய் பாசனத்திற்காக **100 நாட்களுக்கு** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள **8,000 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர்- செய்தி மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9.